## பாடல் 1.

பல்: இயேசுவை மட்டும் நான் அன்புச் செய்வேன்
இயேசுவை மட்டும் நான் பின் செல்லுவேன்
இயேசுவில் மட்டும் நான்இளைப்பாறுவேன்
இயேசுவாய் மட்டும் நான் உருமாறுவேன்

அ.ப: அவர் திருப்பெயர் என்றும் வாழ்கவே
அவர் திருச்சபையில் நாம் வாழவே

சர: 1. பனிபடரும் மலைபோல என்னுள்ளம் வாழுதே
பணியாத மனம்கொண்டு என் வாழ்வு அலைபாயுதே-2
நீதியில் நேர்மையில் நடக்கநான் விரும்பினேன்
நினையாத பொழுதில் நான் திசைமாறினேன்
சாவின் பிடியில் சிக்கினேன் என்னை
சிலுவையின் நிழலில் அழைத்தாரே
இயேசு என்னை அழைத்தாரே
இளைப்பாறிட மகிழ்ந்தாடிட
மனம் குளிர என்னை அணைத்தாரே

சர: 2. சிலைபோல உயிரின்றி என் தசைகள் நடமாடுதே
சிலராலே நலமெல்லாம் எனைவிட்டு தினம்போகுதே-2
பார்ப்பவர் பார்வைக்காய் நன்மைசெய்ய விரும்பினேன்
புகழ்வேண்டி இறைவாழ்வை கறையாக்கினேன்
பாவப் பிடியில் சிக்கினேன் என்னை
பரிவுடன் தன்பக்கம் இழுத்தாரே
இயேசு என்னை இழுத்தாரே
ஒளியானவர் வழியானவர் பிறர்வாழவே என்னை அழைக்கின்றார்

……………………………..

## பாடல் 2

**2. மனமாற்றம் மற்றும் மனவருத்தம்**

தெளிந்த நீரோடையில் கறைகள் தெரிவதுபோல்
சிலுவை நிழலினிலே **என் குறைகள் தெரிகின்றன - 2**
ஆண்டவரே நான் அழுகிறேன் பாவத்தை நினைந்து வருந்துகின்றேன்
**மன்னித்து ஏற்பாய் இறைவாய் - 2**

நாவிருந்தும் நல் வார்த்தை பேசவில்லை
விழியிருந்தும் நான் தூயதை பார்க்கவில்லை - 2
காலிருந்தும் நான் பிறரை நாடவில்லை
கரமிருந்தும் நான் உதவி புரியவில்லை

பாவம் செய்தேன் நான் பரிதவித்தேன் இறைவா
பட்டதுபோதுமென்று பிழை உணர்ந்தேன் தலைவா - 2
நாவினில் மட்டும் உனைத்தொழுதேன் இறைவா
நேரிய வழியில் உனைக் காண்பேன் தலைவா

0000000000000000000000000

## பாடல் 3

3. **பல்:** குழந்தையாக மாறுவோம்
குழந்தை இயேசுவாய் மாறுவோம்
விண்ணகம் சேர மண்ணகம் வாழ
குழந்தையாய் மாறுவோம்
நாம் குவலயம் மாற்றுவோம்

**சர:** புறாவைப் போல் புவியில் வாழ்ந்திடுங்கள்

சின்னஞ்சிறியவர்க்கு உதவி செய்திடுங்கள் - 2
கோபங்கள் தவிர்த்து அயலாரைப் பொறுத்திடுங்கள்-2
என்று சொன்ன இயேசுவின் வழியில்
*நாளும்* ***நாம் நடப்போம்*** - 3

**சர:** குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள்
ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியதாகும் - 2
தாழ்ச்சி மன்னிப்பால் பகைவரை வென்றிடுங்கள்
என்று சொன்ன இயேசுவின் வழியில்
*நாளும்* ***நாம் நடப்போம்*** - 3

00000000000000000000

பாடல் 4

**4. பல்: அழகின் அழகே பரம்பொருளே**
**உயிரின் உயிரே நிறையருளே**
**உருவின் உருவே இயேசுவே**
**அகத்தின்அகமேஆவியே…தூய ஆவியே**

**அ.ப.:** ***மூவொரு இறைவா முழுமுதல் தலைவா***
***தொழுதேன் கரம் குவித்தேன்-2***

**சர: காற்றசைந்தால் மரம் அசையும்**
**பகலவன் ஒளிர்ந்தால் உயிர் வாழும்**
**நீயென்னில் நிறைந்தால் என்னகம் குளிரும்**
**இறையே நினைத்தால் மனிதம் மாறும்**

**சர: மூச்சினிலே என் பேச்சினிலே**
**உன் விழிப் பார்வை தெரியும்**
**ஆசை உறவில் சொந்தங்கள் தேடும்**
**அணுவும் அகிலமும் உன்னன்பில் வாழும்**

**000000000000000**

பாடல் 5

5. **பல்:** உணவாய் வருகின்றார் நம் இறைவன்
எவரும் அறியாத எவரும் புரியாத
மறைபொருளாய் வருகின்றார்
துதிப்போம் அவரை சுவைப்போம் - 2

**சர:** வேற்றுமை களைந்திடவே
நம்மில் வேற்றுமை களைந்திடவே
ஒரு அன்பின் சமூகம் படைத்திவே-2
மனித மாண்புகள் மலர்ந்திடவே-2
நம்மை விண்ணக விருந்திற்கு அழைக்கின்றார்-.

**சர:** மாண்புயர் அவருடலை
அவர்நினைவாய் உண்பதனால்
திருவுடன்படிக்கை நிறைவேறுமன்றோ-2
புனித வாழ்வின் மையமிது-2
இதை உண்போர் கிறிஸ்துவில் உயிர்பெறுவார்

000000000000000

## பாடல் 6

6. பல்: நீ இல்லாமல் என் வாழ்வு நீரில்லாத பயிராகும்-2
உயிராய் உறவாய் என் இறைவாழ்வில்
உள்ளம் மகிழ்ந்திட அருள்பொழிவாய்
என்தாகம் தணிக்கும் ஜீவநதியே
இறைவா…நீயில்லாமல்…

சர: ஆண்டவனேஎன் தலைவா நீயென்றும் நிறைவாயே
குறைவானஎன்வாழ்வில்நான்கொண்ட இலட்சியமே-2
எந்தன் சிந்தையைத் தெளிவாக்கும்
இனி உன்வழி என்னில் ஒளியாகும்
இயேசுவின் குருதியில் எனைக் கழுவும்
என் மூச்சினில் உன் பெயர் உயிராகும்
என் விழிகள் தேடி விழிகள் வந்த
இறைவனே…நீயில்லாமல்

சர: ஏழ்மையும் எளிமையும்நீ காட்டிடும் வாழ்வாகும்
வானவன் என்அன்பேஉனைக் காணஏங்குகிறேன்-2
அன்பையும் அமைதியும் நானறிவேன்
அயலான் உறவினில் நான் நிலைப்பேன்
நானிலம் உன் புகழ் பாடிடுவேன்
நன்மையும் செய்திட நான் விழைவேன்
உன் அன்பில் வாழ வரங்கள் வேண்டும்
இறைவனே…நீயில்லாமல்

## பாடல் 7

பல்: பிறந்தார் - 4
இறைவன் மனிதனாய் நம்மில் பிறந்தார்

அ.ப: வாழ்த்துக்கள் கூறுங்களே
Happy Christmas சொல்லுங்களே
மகிழ்வுடன் அவரை வாழ்த்திப்போற்றி
Happy Birthday சொல்லுங்களே

சர: விண்ணகம் துறந்துமண்ணகம் விழைந்து
தொழுவத்தில் உதித்தாரே
தாழ்ச்சியை ஆடையாய் வறுமையை செல்வமாய்
அணிந்துப் புன்னகைத்தார்-2
அவர் இயேசு எனப்படுவார்
அவர் பெரியவராய் இருப்பார்
நம் உள்ளத்தை ஆட்சி செய்வார்
அவரரசுக்கு முடிவு இல்லை
இனியவர் வழியில் நடந்து
இனிதாய்வாழ்ந்திடுவோம்….(வாழ்த்துக்கள்…)

நிலையில்லா உலகில் நிலைப்பெறும் வாழ்வை
கொணர்ந்திட பிறந்தாரே
வானகம் மகிழ மனிதம் தழைக்க
சிறுமலராய் மலர்ந்தார்-2
அவர் பாவத்தை மன்னிப்பவர்

அகம்பாவத்தை அழித்திடுவார்
இம்மானுவேல் எனப்படுவார்
இறைமாட்சியை வெளிக்கொணர்வார்
இனியவர் வழியில் நடந்து
இனிதாய் வாழ்ந்திடுவோம்.... (வாழ்த்துக்கள்...)

000000000000000000000000000000000000000

1.
**முதலுரை: வாசிக்கப்படுசிறது:**
பனிபடரும் மலைபோல என்னுள்ளம் வாழுதே
பணியாத மனம்கொண்டு என் வாழ்வு அலைபாயுதே
சிலைபோல உயிரின்றி என் தசைகள் நடமாடுதே
சிலராலே நலமெல்லாம் எனைவிட்டு தினம்போகுதே
இனி நான் என்னச் செய்வேன்? ஆம்,

இயேசுவை மட்டும் நான் அன்புச் செய்வேன்
இயேசுவை மட்டும் நான் பின் செல்லுவேன
இயேசுவில் மட்டும் நான்இளைப்பாறுவேன்
இயேசுவாய் மட்டும் நான் உருமாறுவேன்

**பாடல்**
**ஓர் அழகான பெரிய ஆலயத்திற்கு முன்னால் இயேசுவின் விசுவாசி பாடுவதுபோல் காட்சித் தொடங்குகிறது**

பல்: இயேசுவை மட்டும் நான் அன்புச் செய்வேன்
இயேசுவை மட்டும் நான் பின் செல்லுவேன் **(கடலோரக் காட்சிகள்: இயேசுவை சீடர்கள் பின்பற்றும் காட்சிகள்)**

இயேசுவில் மட்டும் நான்இளைப்பாறுவேன் **(actor is seen singing)**

இயேசுவாய் மட்டும் நான் உருமாறுவேன்

அ.ப: அவர் திருப்பெயர் என்றும் வாழ்கவே **(மீண்டும் ஆலயத்தின் காட்சி)**
அவர் திருச்சபையில் நாம் வாழவே

சர: 1. பனிபடரும் மலைபோல என்னுள்ளம் வாழுதே(voice at the background))
**(பனிபடரும் மலை காட்சிகள்)**

பணியாத மனம்கொண்டு என் வாழ்வு அலைபாயுதே-2**(actor is seen singing)**
நீதியில் நேர்மையில் நடக்கநான் விரும்பினேன்
நினையாத பொழுதில் நான் திசைமாறினேன்
சாவின் பிடியில் சிக்கினேன் என்னை
சிலுவையின் நிழலில் அழைத்தாரே **(சிலுவையின் நிழல் காட்சி)**
இயேசு என்னை அழைத்தாரே **(Exclusively Jesus’ scene)**
இளைப்பாறிட மகிழ்ந்தாடிட
மனம் குளிர என்னை அணைத்தாரே

சர: 2. சிலைபோல உயிரின்றி என் தசைகள் நடமாடுதே
**(சிலை காட்சிகள்)**

சிலராலே நலமெல்லாம் எனைவிட்டு தினம்போகுதே-2 **(actor is seen singing)**

பார்ப்பவர் பார்வைக்காய் நன்மைசெய்ய விரும்பினேன் **(actor is well dressed with rings, watch, tie, shoes, suit and distributes 10 rupee notes to the poor and people seen watching him)**
புகழ்வேண்டி இறைவாழ்வை கறையாக்கினேன்
பாவப் பிடியில் சிக்கினேன் என்னை
பரிவுடன் தன்பக்கம் இழுத்தாரே **(இயேசுவின் காட்சிகள்)**
இயேசு என்னை இழுத்தாரே (actor sings)
ஒளியானவர் வழியானவர் பிறர்வாழவே என்னை அழைக்கின்றார்

காட்சிகள்: அழகான பெரிய ஆலயம்
சிலுவையின் நிழல்
சிலைகள் காட்சி
சில ஏழைகள், ரூபாய் நோட்டுகள்

…………………………..

**மனமாற்றம் மற்றும் மனவருத்தம்**

தெளிந்த நீரோடையில் கறைகள் தெரிவதுபோல் **(தெளிந்த நீரோடை காட்சி…நீருக்கடியில் கல் மண் தெரியவேண்டும்)**
சிலுவை நிழலினிலே **என் குறைகள் தெரிகின்றன - 2** (**சிலுவை காட்சி, நடிகர் சிலுவையடியில் நின்றுகொண்டு பாடுகிறார்)**
ஆண்டவரே நான் அழுகிறேன் பாவத்தை நினைந்து வருந்துகின்றேன் **(நடிகர் அழுகிற காட்சி)**
**மன்னித்து ஏற்பாய் இறைவாய் - 2**

நாவிருந்தும் நல் வார்த்தை பேசவில்லை **(நடிகர் கெட்டவார்த்தைப் பேசுவதுபோல் கையும் வாயும் அசைத்துக் கோபமாய் பேசுவதுபோல் நடிப்பு)**
விழியிருந்தும் நான் தூயதை பார்க்கவில்லை – 2 **(நடிகர் கெட்டக் காட்சிகளை பார்ப்பதுபோல் நடிப்பு)**

காலிருந்தும் நான் பிறரை நாடவில்லை **(நடிகர் மருத்துவமனை அருகே சென்று உள்ளே செல்ல மனமில்லாமல் பின்வாங்கிச் செல்லுதல்)…மருத்துவமனை காட்சி long shot)**

கரமிருந்தும் நான் உதவி புரியவில்லை **(பெரியவர் ஒருவர் இரு பெரிய சுமைகளை கஷ்டப்பட்டு ஏந்திச் செல்வதுபோல் காட்சி)**

பாவம் செய்தேன் நான் பரிதவித்தேன் இறைவா **(நடிகர் தூங்க முடியாமல் படுக்கையில் புரண்டு படுப்பதுபோல் காட்சி)**
பட்டதுபோதுமென்று பிழை உணர்ந்தேன் தலைவா - 2 **(மீண்டும் சிலுவையின் அடியில் நின்றவாறு பாடி நடிப்பதுபோல் காட்சி)**
நாவினில் மட்டும் உனைத்தொழுதேன் இறைவா
நேரிய வழியில் உனைக் காண்பேன் தலைவா

குழந்தையாக மாறுவோம்

**7. பல்:** குழந்தையாக மாறுவோம் **(குழந்தைகள் காட்சி)**
குழந்தை இயேசுவாய் மாறுவோம் **(குழந்தை இயேசு காட்சி)**
விண்ணகம் சேர மண்ணகம் வாழ **(மாலை வானம் காட்சி)**
குழந்தையாய் மாறுவோம் **(மீண்டும் குழந்தைகள் காட்சி)**
நாம் குவலயம் மாற்றுவோம் **(உலகம் காட்சி)**

**சர:** புறாவைப் போல் புவியில் வாழ்ந்திடுங்கள் **(புறாக்கள் கூட்டமாக இருக்கும் காட்சி)**
சின்னஞ்சிறியவர்க்கு உதவி செய்திடுங்கள் - 2 **(தொழுநோயாளர்கள் காட்சி)**
கோபங்கள் தவிர்த்து அயலாரைப் பொறுத்திடுங்கள்-2 **(நடிகர் பாடுகிற காட்சி)**

என்று சொன்ன இயேசுவின் வழியில் **(இயேசுவின் மலைப்பொழிவு காட்சி)**
*நாளும்* ***நாம் நடப்போம்*** - 3

**(இடையிசையின் போது: இயற்கை வளங்கள் காட்சி, பூக்கள் காட்சி, குழந்தை காப்பகம் காட்சி)**

**சர:** குழந்தைகளை என்னிடம் வர விடுங்கள் **(இயேசு குழந்தைகளை வரவேற்று ஆசீரவதிக்கும் காட்சி)**
ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியதாகும் - 2
தாழ்ச்சி மன்னிப்பால் பகைவரை வென்றிடுங்கள் **(ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு மன்னிப்பது போல, அல்லது ஆலயத்தில் ஒருவரையொருவர் சமாதானம் செய்யும் காட்சி)**
என்று சொன்ன இயேசுவின் வழியில் **(இயேசுவின் மலைப்பொழிவு காட்சி)**
*நாளும்* ***நாம் நடப்போம்*** - 3

தேவையானவை: திருப்பலியில் சமாதானம் செய்வது
தோட்டம், குழந்தை காப்பகம்

**இதே மெட்டில்**................

குழந்தைக் கென்று ஒருமொழி
பன்னுலகம் பேசும் இசைமொழி
கனணி பேசும் இயலிசை பேசும்
இறைவன் தந்த தனிமொழி
அதுவே செந்தமிழ் செம்மொழி

1. புறாவைப்போல் மாசின்றி பழகிடுவோம்
சாதிய மாயையினி மண்ணில் புதைத்திடுவோம்
வீரத் தமிழராய் செயலில் காட்டிடுவோம்
தமிழன்னையின் பெருமைகளை
நானிலம் ஒளிர ***வாழ்ந்திடுவோம்***-3

2. வள்ளுவன் சொன்ன வாய்மொழி படித்திடுவோம்
வாழ்வாங்கு வாழ்ந்திடவே ஓர்மை வளர்த்திவோம்
எவருக்கும் எதிலும் தமிழன் அடிமையல்ல
என்றுரைத்த பெரியோர்வழி
எந்நாளும் நடந்திட **முனைந்திடுவோம்**

**000000000000000**

**அழகின் அழகே** மெட்டில்........

**பல்:** அழகின் அழகே செந்தமிழே
உயிரின் உயிரே என்னுயிரே
ஈடிணையில்லா தமிழ்த்தாயே
ஈன்ற மாந்தரை ஒன்றிணைப்பாய்

அ.ப: மேதினில் முழுவதும் மூன்று தமிழே
ஆதியில் தோன்றியதே

சர: காற்றசையும் வரை தமிழ் ஒலிக்கும்
நற்றமிழ் வளர்ந்தால் உயிர் வாழும்
தமிழா தமிழா உயிரினும் மேலாய்
தமிழை வளர்த்தால் *தரணியை ஆள்வாய்* *(தரணியே மாறும்)*

மூச்சினிலே நம் பேச்சினிலே
தமிழ்விழிப் பார்வை வேண்டும்

நாம் தமிழர் என்ற சிந்தனை இருந்தால்
நம்மை வீழ்த்துவோர் எவரும் உண்டோ?.....

2.

மூவொரு இறைவா! பரம்பொருளே!
நீரே என் அழகு! நீரே என் உயிர்
நீரே என் உரு! நீரே என் அகம்
காற்றசைந்தால் மரம் அசையும்
பகலவன் ஒளிர்ந்தால் உயிர் வாழும்
மூச்சினிலே என் பேச்சினிலே
உன் விழிப் பார்வை தெரியும்
இனி என்றும் கரம் குவித்து உம்மை தொழுவேன்

.

**8.** பல்: அழகின் அழகே பரம்பொருளே **(நடிகர் பாடும் காட்சி)**
உயிரின் உயிரே நிறையருளே
உருவின் உருவே இயேசுவே **(விண்ணகக் காட்சிகள்)**

அகத்தின்அகமேஆவியே…தூய ஆவியே **(தூய ஆவி காட்சிகள் புறா வடிவில் இறங்குவதுபோல்)**

அ.ப.: *மூவொரு இறைவா முழுமுதல் தலைவா*
*தொழுதேன் கரம் குவித்தேன்-2* ***(நடிகர் முழந்தாலிட்டு மன்றாடுவதுபோல்)***

சர: காற்றசைந்தால் மரம் அசையும் **(மரங்கள் பலமாக, இதமாக அசையும் காட்சிகள்)**
பகலவன் ஒளிர்ந்தால் உயிர் வாழும் **(நெல்வயல், பசுமையான புல்வெளி காட்சி)**
நீயென்னில் நிறைந்தால் என்னகம் குளிரும் **(பாடகர் பாடுவதுபோல் காட்சி)**
இறையே நினைத்தால் மனிதம் மாறும்

சர: மூச்சினிலே என் பேச்சினிலே **(கடல் அலை காட்சி, கடறடகரை காட்சி)**
உன் விழிப் பார்வை தெரியும்
ஆசை உறவில் சொந்தங்கள் தேடும் **(பாடகர் பாடுவதுபோல் காட்சி)**
அணுவும் அகிலமும் உன்னன்பில் வாழும்

-----------------------------------------

**தமிழே அழகே செந்தமிழே**
**மொழிகளின் உருவே இசையமுதே**
**மனித வாழ்வின் தேனருவி**

செம்மொழி தமிழே வாழ்கவே!

அ.ப்: இயல் இசை நாடகம் முத்தமிழ்த் தாயே
புகழ்வேன் கரம் குவித்தேன்

சர: செந்தமிழா நீ விழித்தெழுவாய்
தமிழ் மொழியால் நீ அணிதிரள்வாய்
அச்சம் தவிர்ப்பாய் அன்பிலே இணைவாய்
தமிழ்மொழி பெருமையை நீ உணர்வாய்

மூச்சினிலே உன் பேச்சினிலே
உன் வழிப்பார்வையில் தமிழ்வாழ
பார்புகழ் தமிழில் மனிதம் வாழும்
அணுவும் அகிலமும் தமிழென்று முழங்கும்!

அன்னை மரியாளை
ஆயிரம் பெயர் சொல்லி அழைத்தாலும்
பாயிரம் இசைமீட்டிப் பாடினாலும் போதுமா?
போதாது!
ஏனெனில் தஞ்சம் தேடி வருவோர்கெல்லாம்
அரணும் கேடயமும் வலிமையுமாய் இருக்கும்
நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம்
நம்மை அழைத்துச் செல்கிறவர்அவரல்லாவா! !
வாருங்கள் மாதாவின் புகழ் பாடுவோம்!
பொன் நாவாலே பண்பாடுவோம்!

4.

பல்: மாதாவின் புகழ்பாடுவோம்
கன்னிமாதாவின் புகழ்பாடுவோம்
ஆயிரம் பெயர் சூட்டி பாயிரம் இசைமீட்டி
நாவாலே பண்பாடுவோம்
பொன் நாவாலே பண்பாடுவோம்
ஆவே மரியா-2 மரியே நீ வாழ்க -2

சர: தஞ்சம்தேடி வருவோர்க்கெல்லாம்
இளைப்பாற வழி சொல்வாயே
தூயவனை ஈன்றெடுத்த தூயகத்தின் பெட்டகமே
எம் வாழ்வை உம் மகன்பால் ஈர்ப்பாயம்மா
பிறர்சேவையில் இனிவாழ்ந்திட
உன் வழியில் எந்நாளும் நடத்திடம்மா

சர: தன்னம்பிக்கை இல்வாழ்க்கையில்
இழந்தாலும் உடன்நிற்பாயே
சொன்னாலே போதாது உன் பார்வை ஒன்றாலே
நோயெல்லாம் குணமாக்கும் எங்கள் தாயே
அவர் சொற்படி செய்வீரென்று
உன்மகன் பதம் நாட அழைத்தாயம்மா

------------------------

பொய்யை மெய்யாக இருளை ஒளியாக திரித்துக்காட்டும் இவ்வுலகில் எவரும் அறியாத எவரும் புரியாத விதத்தில் கோதுமை அப்பத்தின் திராட்சை இரசத்தின் வடிவில் நம் மத்தியில் நமக்கெல்லாம் உணவாக வருகின்றார் நம் இறைவன். என்ன விந்தை! வாருங்கள் அவரை உண்போம் நம்மில் வேற்றுமைகளைக் களைந்து ஒருமனப்பட்டவர்களாய் கிறிஸ்துவின் மறையுடலாய் உருமாவோம்.

9. **பல்:** உணவாய் வருகின்றார் நம் இறைவன் **(நற்கருணை காட்சிகள்)**
எவரும் அறியாத எவரும் புரியாத **(புனித அப்பத்தை கிட்டே காட்டுவதுபோல் காட்சி)**
மறைபொருளாய் வருகின்றார்
துதிப்போம் அவரை சுவைப்போம் - 2 **(நற்கருணை ஆராதனை காட்சி)**

**சர:** வேற்றுமை களைந்திடவே **(பாடகர் பாடுவதுபோல் காட்சி... ஆலயத்திற்கு மக்கள் செல்வதுபோல் காட்சி)**
நம்மில் வேற்றுமை களைந்திடவே
ஒரு அன்பின் சமூகம் படைத்திவே-2 **(ஆலயத்தில் மக்கள் திருப்பலியில் பங்கெடுக்கும் காட்சி)**
மனித மாண்புகள் மலர்ந்திடவே-2 **(இந்து இசுலாமியர் கிறிஸ்தவர் சீக்கியர் யூதர் புத்தர் ஜைனர்- 7 பேரும் ஒரே வரிசையாக அருகருகே நின்று கரங்களை உயர்த்தி பிடித்தவாறு சிரிப்பது போன்ற காட்சி)**
நம்மை விண்ணக விருந்திற்கு அழைக்கின்றார்-**.(மீண்டும் மக்கள் நற்கருணை பெறும் காட்சி)**

**சர:** மாண்புயர் அவருடலை (கிறிஸ்து சிலுவையில் காட்சி **close up shot)**
அவர்நினைவாய் உண்பதனால் **(பாடகர், பாடற்குழுவின் நடுவில் நின்று பாடுவதுபோல் காட்சி)**
திருவுடன்படிக்கை நிறைவேறுமன்றோ-2
புனித வாழ்வின் மையமிது-2
இதை உண்போர் கிறிஸ்துவில் உயிர்பெறுவார் **(கல்லறை காட்சி கல்லறை சிலுவைகள் காட்சி)**

**000000000000000000000000**

**உனையடைந்தாலன்றி**
**என் ஆன்மா ஓய்வின்றி அலைபாய்கிறது**
**என்கிறார் புனித அகுஸ்தினார்.**
**நிஜமின்றி நிழலில்லை,**
**தாயின்றி சேயில்லை,**
**கணவனின்றி மனைவியில்லை,**
**அருளின்றி பொருளில்லை,**
**நீரின்றி பயிரில்லை,**
**இறைவா நீயின்றி நானில்லை.**
**உயிராய் உறவாய் நிஜமாய்**
**தாயாய் தந்தையாய் வற்றாத நதியாய்**
**என் வாழ்வின் தாகம் தீர்க்க**
**வருவாயா என் தலைவா!**

10. பல்: நீ இல்லாமல் என் வாழ்வு நீரில்லாத பயிராகும்-2 **(நீரற்று காணப்படும் நெல்வயல் காட்சி, வரண்ட பூமி காட்சி)**
உயிராய் உறவாய் என் இறைவாழ்வில்
உள்ளம் மகிழ்ந்திட அருள்பொழிவாய்
என்தாகம் தணிக்கும் ஜீவநதியே **(சலசலவென கொட்டும் அருவி காட்சி)**
இறைவா...நீயில்லாமல்...

சர: ஆண்டவனேஎன் தலைவா நீயென்றும் நிறைவாயே **(இயற்கை சூழலில் பாடகர் பாடுவதுபோல் காட்சி)**

குறைவானஎன்வாழ்வில்நான்கொண்ட இலட்சியமே-2
எந்தன் சிந்தையைத் தெளிவாக்கும்
இனி உன்வழி என்னில் ஒளியாகும்
இயேசுவின் குருதியில் எனைக் கழுவும் **(இயேசுவின் இரத்தம் படிந்த மேனி போன்ற காட்சிகள்)**
என் மூச்சினில் உன் பெயர் உயிராகும் **(பாடகர் பாடும் காட்சி)**
என் விழிகள் தேடி விழிகள் வந்த
இறைவா…நீயில்லாமல்

சர: ஏழ்மையும் எளிமையும்நீ காட்டிடும் வாழ்வாகும் (ஆண்டவர், மக்கள் நடுவில்
வானவன் என்அன்பேஉனைக் காணஏங்குகிறேன்-2
அன்பையும் அமைதியும் நானறிவேன்
அயலான் உறவினில் நான் நிலைப்பேன்
நானிலம் உன் புகழ் பாடிடுவேன்
நன்மையும் செய்திட நான் விழைவேன்
உன் அன்பில் வாழ வரங்கள் வேண்டும்
இறைவனே…நீயில்லாமல்

-------------------------------------

தாழ்ச்சியை ஆடையாய்
வறுமையை செல்வமாய் அணிந்து
நம்மைப் பார்த்துப் ன்னகைக்கிறார்
பாலகன் இயேசு.
விண்ணகம் துறந்து மண்ணகம் விழைந்து
நிலையில்லா உலகில் நிலைப்பெறும் வாழ்வை
கொணர்ந்திட மாட்டுத் தொழுவத்தில் உதித்தவர் அவர்.
குதுாகலமாய் அவருக்கு
பிறந்தநாள் வாழ்த்துக்கள் சொல்வோமா!

பல்: பிறந்தார் - 4
இறைவன் மனிதனாய் நம்மில் பிறந்தார்

அ.ப: வாழ்த்துக்கள் கூறுங்களே
Happy Christmas சொல்லுங்களே
மகிழ்வுடன் அவரை வாழ்த்திப்போற்றி
Happy Birthday சொல்லுங்களே

சர: விண்ணகம் துறந்துமண்ணகம் விழைந்து
தொழுவத்தில் உதித்தாரே
தாழ்ச்சியை ஆடையாய் வறுமையை செல்வமாய்
அணிந்துப் புன்னகைத்தார்-2
அவர் இயேசு எனப்படுவார்
அவர் பெரியவராய் இருப்பார்
நம் உள்ளத்தை ஆட்சி செய்வார்
அவரரசுக்கு முடிவு இல்லை
இனியவர் வழியில் நடந்து
இனிதாய்வாழ்ந்திடுவோம்….(வாழ்த்துக்கள்…)

நிலையில்லா உலகில் நிலைப்பெறும் வாழ்வை
கொணர்ந்திட பிறந்தாரே
வானகம் மகிழ மனிதம் தழைக்க
சிறுமலராய் மலர்ந்தார்-2
அவர் பாவத்தை மன்னிப்பவர்
அகம்பாவத்தை அழித்திடுவார்
இம்மானுவேல் எனப்படுவார்

இறைமாட்சியை வெளிக்கொணர்வார்
இனியவர் வழியில் நடந்து
இனிதாய் வாழ்ந்திடுவோம்.... (வாழ்த்துக்கள்...)

**இறைவனின் இரக்கத்தின் முழு வெளிப்பாடு தாய். தாயைவிட உயர்ந்த ஓர் உயிர் இவ்வுலகில் இருக்கமுடியாது. அதிலும் இறைவனின் தாய் கன்னிமரியாள் தரையில்லா கருணைக்கடல். எல்லா காலங்களிலும் குறிப்பாக நாம் அபலையாகத் திரியும்போதும் துன்பக்கடலில் மூழ்கும்போதும் நம்மை பாதுகாத்து இறைவனிடம் கரைசேர்க்கின்றவர்.**